OS.No. 359/2023 – 27.01.2025

PW3 – தமிழ்மணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு வழக்கு பற்றி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரி. அதற்கு முன்னர் வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் புரோநோட்டை காண்பித்த பின்னர் அந்த புரோநோட்டை நான்தான் எழுதினேன் என்று கூறினேன் என்றால் சரி. நான்தான் தமிழ்மணி என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்துள்ளேன். ஆதார் அட்டையின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 5 வருடமாக பழக்கம். புரோநோட்டை நான் எழுதி கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பணம் கொடுத்தபோது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் நான், செல்வம், பழனிசாமி, மற்றும்

கந்தசாமி ஆகியோர் உடனிருந்தோம். பணம் என் மூலமாக கேட்டு கொடுக்கப்படவில்லை என்றால் சரி. பிரதிவாதி வாதியிடம் கடன் ஏதும் பெறவில்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிக்கு கடன் ஏதும் கொடுக்கவில்லை என்றும் கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு முன்னரே தெரியும் என்றும் வாதி சொல்லிதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து தயார் செய்த புரோநோட்டை வைத்து இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

நான் இன்று என்னுடைய ஆதார் அட்டையின் அசல் கொண்டு வந்துள்ளேன். அதன் நகல் இன்று தாக்கல் செய்கிறேன். மேற்படி அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.